View metadata, citation and similar papers at core.ac.uk
brought to you by CORE
provided by IR South Eastern University of Sri Lanka



# யுத்தத்தின் பின்னரான இலங்கையின் வெளிநாட்டு கொள்கையும் அதன் போக்குகளும் பற்றிய ஓர் விமர்சனப் பகுப்பாய்வு : 2009 - 2015 வரையான காலப்பகுதியை மையப்படுத்திய ஆய்வு

# A Critical Study on Foreign Policy and its trends in the post – war Sri Lanka: A Case Study during 2009 - 2015

**A. N. Nazloon Nazhath**
South Eastern University of Sri Lanka
nazlinnazhath92@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒரு அரசு தனது நலன்களை பாதுகாப்பதற்கும் நலன்களை உறுதியான செயற்பாட்டு நோக்கங்களாக்குவதற்குமான இலக்குகளை சிந்தித்து செயற்படுத்துவதற்கான முதல் நிலை மூலக் கூறு வெளிநாட்டுக் கொள்கை எனலாம் (Ford &Lincoln, 1962) இதனடிப்படையில் தொடர்பாடலின் விருத்தி மறுபக்கத்தில் பொருளாதார வளங்களின் அருந்தல் விதி என்பன ஒன்று சேர்ந்து நாடுகளை கிராமங்களுக்கு நிகரானதாக்கியுள்ளது. இவ்வகையில் இலங்கையின் வெளிநாட்டு உறவுகள் இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையிலான இராஜ தந்திர மற்றும் வர்த்தக உறவினை குறிப்பதாக காணப்படுகின்றது. கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கையில் இடம் பெற்ற இன முரண்பாட்டினை தொடர்ந்து இலங்கை அரசானது பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. இவ்யுத்த முடிவானது இலங்கையின் வெளிநாட்டு கொள்கையிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தென்னாசிய பிராந்தியத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடாக திகழும் இலங்கை அரசானது தேச அபிவிருத்தி என்பதில் பின்னடைவினை எதிர்க்கொள்கின்றது. இதற்கு கடந்த மூன்று தசாப்த காலமாக இடம் பெற்ற இன முரண்பாடே காரணமாகும். இவ்வின முரண்பாட்டினால் ஏற்பட்ட யுத்தத்தினால் தேசத்தினை கட்டியெழுப்புவதில் பெரும் சவால்களை எதிர்கொண்டிருந்தது. மேலும் இலங்கையின் யுத்த முடிவினை தொடர்ந்து வந்த அரசாங்கங்கமானது நாட்டின் சமூக, பொருளாதார, பாதுகாப்பு நடவடிக்கைகளை பேணுவதற்காக வெளியுறவுக் கொள்கையினை அமைத்துக் கொண்டமையினை காணலாம். யுத்தத்தின் பின்னரான அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையானது இலங்கை அரசியலிலும் சர்வதேச ரீதியிலும் எவ்வாறான தாக்கத்தினை செலுத்தின என்பது இவ்வாய்வினுடைய பிரச்சினையாக காணப்படுகின்றது. இதனடிப்படையில் 2009 – 2015 வரையிலான அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையானது எவ்வாறான தாக்கங்களை இலங்கை அரசியலில் ஏற்படுத்தியது என்பதனை கண்டறிதல் என்ற நோக்கத்தினை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்வானது பண்புசார் தரவுகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக முதனிலைத் தரவுகளாக நேர்காணல் வரையுறுக்கப்பட்ட அவதானம் போன்றனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக முன்னைய ஆய்வுகள், நூல்கள், சஞ்சிகைகள் , புள்ளிவிரங்கள் போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனடிப்படையில் யுத்த முடிவினை தொடர்ந்து வெளிநாட்டுக் கொள்கையானது இலங்கையில் அரசியல் பொருளாதார வரத்தக மற்றும் சமூக ரீதியாக தாக்கத்தினை செலுத்தியதுடன் சர்வதேச ரீதியிலும் பாரிய தாக்கத்தினை செலுத்தியிருந்தன என்பது கண்கூடு.

***Keywords***: *Postwar, Foreign policy, Sri Lanka, Ethnic conflict, International relation*

## அறிமுகம்

வளர்ச்சி அடைந்து வரும் உலகில் எந்த ஒரு நாடும் தனித்து இயங்க முடியாது என்றவகையில் ஒரு நாடு தன்னுடைய தேசிய நலன், பாதுகாப்பு, இராஜதந்திரம் என்பவற்றை விருத்தி செய்து கொள்வதற்காக ஏனைய நாடுகளுடன் தொடர்புகளினை பேணுவதனை வெளிநாட்டு கொள்கை எனலாம். சர்வதேச

உறவுகளில் முழுமையாகவும் , முறையாகவும் பங்கேற்பதற்கேற்ற வகையில் ஒவ்வொரு நாடும் தனக்கென தனியான ஒரு வெளிநாட்டு கொள்கையைக் கொண்டிருக்கும்.

இதனடிப்படையில் கியூ ஜிப்சன் “ உலகின் மற்றைய பகுதிகளோடு ஓர் அரசாங்கத்தின் தொடர்புகளை இணைத்து நடாத்துவதற்காக திட்டவட்டமான அறிவு, அரசியல் , அனுபவம் என்பவற்றை அடிப்படையாக கொண்டு அமைக்கப்படும் விரிவான திட்டமே வெளிநாட்டுக் கொள்கையாகும் ” ( Appadurai, 1981, p.1)

இலங்கையின் வெளிநாட்டு உறவுகள் இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் வர்த்தக உறவினை குறிப்பதாக காணப்படுகின்றது. சர்வதேச ரீதியில் ஏனைய நாடுகளை போன்று இலங்கை அரசாங்கத்திற்கு நிரந்தரமான வெளிநாட்டு கொள்கை என ஒன்று இல்லை. இலங்கை அரசியலமைப்பில் வெளிநாட்டு கொள்கை என்று கூறப்பட்டிருந்தாலும் அரசாங்கம் மாறுகின்ற போது இலங்கையின் வெளிநாட்டு கொள்கையும் மாறுகின்ற தன்மையை காணலாம். இதனடிப்படையில் யுத்தத்திற்கு பின்னரான இலங்கையின் வெளிநாட்டு கொள்கையானது (2009 – 2015வரை) முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக் காலமாக குறிப்பிடலாம் இக்காலத்திலான அரசாங்கமானது எவ்வாறான வெளிநாட்டுக் கொள்கையினை கொண்டு செயற்பட்டது மற்றும் அதனால் இலங்கையில் எவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டன என்பதனை கண்டறிவதாக இவ்வாய்வு காணப்படுகின்றது. அத்தோடு கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கையில் இடம் பெற்ற இன மோதலானது முடிவுக்கு கொண்டுவரப்பட்டதனை தொடர்ந்து இலங்கை அரசானது பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. இவ்வாறான இன மோதலானது இலங்கையின் வெளிநாட்டு கொள்கையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தின எனலாம். இந்தவகையில் யுத்த முடிவினை தொடர்ந்து இலங்கையின் வெளிநாட்டு கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களினையும், அதனால் இலங்கை அரசியலில், சர்வதேச ரீதியில் ஏற்பட்ட தாக்கங்களினையும் ஆராய்வதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு பிரச்சினை

இன்றைய அரசுகள் ஒவ்வொன்றும் தங்களின் நலன்களையும் , அபிலாசைகளையும் பேணிக் கொள்ளும் வகையில் வெளியுறவு கொள்கையை பின்பற்றி வருகின்றன. இந்தவகையில் இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்று வரையிலும் அதன் வெளிநாட்டு கொள்கையானது அரசாங்கத்தின் மாற்றங்களிற்கு ஏற்ப மாறி வருவதனை காணலாம். இதன்படி யுத்தத்தின் பின்னரான இலங்கையின் வெளிநாட்டு கொள்கையானது புதிய பரிணாமத்தை கொண்டு பயணிக்கின்றன எனலாம்.

யுத்தத்தின் பின்னராக நாட்டை கட்டியெழுப்புதல் மற்றும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான அபிலாசையினூடாக நாட்டின் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காகவே யுத்தத்தின் பின்னரான அரசாங்கமானது வெளிநாட்டுக் கொள்கையினை மேற்கொண்டமையினை காணலாம். யுத்தத்தின் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது இலங்கை அரசியலில் பாரிய தாக்கத்தினை செலுத்தின. மேலும் யுத்தத்தின் பின்னரான (2009 -2015) அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையானது இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் எவ்வாறாக தாக்கத்தினை செலுத்தின என்பது இவ்வாய்வினுடைய பிரச்சினையாக காணப்படுகின்றது

ஆய்வு நோக்கம்

2009 – 2015 வரையிலான அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையானது இலங்கை அரசியலில் எவ்வாறான தாக்கத்தினை செலுத்தின என்பதனை கண்டறிதல் என்ற நோக்கத்தினை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது ஒரு விடய ஆய்வாக காணப்படுவதுடன் பண்பு ரீதியான தரவுகளினை அடிப்படையாக கொண்டு மேற் கொள்ளப்பட்டுள்ளது. முதனிலைத் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற இரு தரவுகளை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு வரையப்பட்டுள்ளது.
இவ்வாய்வினை பொறுத்த வரையில் முதனிலைத் தரவுகளாக, நேர்காணல் , வரையறுக்கப்பட்ட அவதானம் போன்ற நுட்ப முறைகளை பயன்படுத்தி பெறப்பட்டு உள்ளன. முன்னைய ஆய்வுகள், நூல்கள் , சஞ்சிகைகள் , ஆவணங்கள் , அறிக்கைகள் , புள்ளிவிபரங்கள் போன்றன இரண்டாம் நிலைத் தரவுகளாக பெறப்பட்டுள்ளன.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

இவ்வாய்வுக்கான தரவுகளும் தகவல்களும் பல்வேறு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளதுடன் அவை பண்பு ரீதியான ஆய்வு முறையினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு ஆய்வு முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவுகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. சீனா பக்கம் சாயும் போக்கு
   யுத்தத்தின் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை ஆசிய வல்லரசுகளின் பலத்திற்கான ஒருமைப்பாட்டினை ஏற்படுத்துவதாக காணப்பட்டது. குறிப்பாக சீனா, பாகிஸ்தான், லிபியா, ஈரான் போன்ற நாடுகளுடனான நெருக்கம் பரந்த வெளிப்படையான ஆசிய கட்டமைப்பினை அடையாளப்படுத்தியது. இதன்படி சீனாவுடன் பாரிய ஒத்துழைப்புக்களை இலங்கை அரசாங்கம் பேணி வந்தமையை காணலாம். பொருளாதார அடிப்படையிலும் பாதுகாப்பு அடிப்படையிலும் சீனாவுடனான உறவு நிலையானது முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக காணப்பட்டது.

   எடுத்துக்காட்டாக சீனாவினால் முன்னெடுக்கப்படும் ‘‘முத்துமாலை ‘‘ கடற்கொள்கைக்கு இசைவான அம்பாந்தோட்டை துறைமுக விருத்தி குறிப்பிட்டு சொல்லக் கூடிய முக்கிய அம்சமாகும். மேலும் புத்தளம் மாவட்டத்தில் நுரைச்சோலை அனல் மின் நிலையத்திட்டம் மற்றும் BMICH மீளமைப்புக்கான திட்டமிடல், மன்னார் எண்ணெய் ஆய்வுத்திட்டம் எனப் பல வியங்களில் சீனா - இலங்கை நட்புறவு காணப்பட்டது என்பதை குறிப்பிட்டுக் கூறலாம். மேலும் இலங்கையை ஓர் இறைமையுள்ள நாடாக மாற்றுவதற்கான உபாயத்தினை சீனா பக்கம் சாய்வதன் மூலம் முன்னெடுக்க முடியுமென்ற கருத்தானது ஆளும் தரப்பினரிடையே காணப்பட்டது.

   யுத்தத்திற்கு பின்னராக 2013ம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு வர்த்தகம் மூன்று பில்லியன் அமெரிக்க டொலரையும் தாண்டியுள்ளது, இலங்கை தன்து பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளில் சீனா இரண்டாவது இடத்திலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.சர்வதேச மட்டத்திலும் , பிராந்திய அரசியலிலும் ,

பொருளாதார போட்டியிலும், மேற்குலகிற்கும் , இந்தியாவிற்கும் சீனா சவாலாக விளங்குகின்றது. இதனால் சீனாவை இலங்கை பக்கம் ஈர்ப்பதன் மூலம் காலணித்துவ, நவகாலணித்துவ சக்திகளின் செல்வாக்கினை இலங்கை அரசாங்கமானது உடைக்க முயன்றுள்ளது. மேலும் யுத்தத்திற்கு பின்னராக இரு நாடுகளுக்கும் இடையில் நடைப்பெற்ற வர்த்தக பரிமாற்றங்கள் இரு நாடுகளுக்கும் இடையில் இறுக்கமான பிணைப்பின் அடையாளமாக கருத முடியும்.

2. இந்தியாவுடனான உறவு
புவிசார் அரசியல் பாரம்பரியத்திற்குள்ளும் இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள்ளும் இலங்கை அமைந்திருந்தது. இதனால் இந்தியா இலங்கை சார்ந்தும் இலங்கை இந்தியா சார்ந்தும் செயற்பட முனைந்தன எனலாம். இந்தவகையில் யுத்தத்தின் பின்னரான மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அரசாங்கம் அவ்வகை ஒத்துழைப்பில் அதிக நெருக்கம் காட்டி வந்தது எனலாம்.
எனினும் காலப்போக்கில் இவ்வுறவு நிலையில் தளம்பல் ஏற்பட்டமையை சுட்டிக்காட்டலாம். அதாவது இலங்கையின் இன மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக சீனா உதவியமையும் அனேகமாக அவற்றின் அடிப்படையிலேயே இலங்கை அரசின் தீர்மானம் அமைந்திருந்தது. இந்நிலையில் இந்தியாவுடனான இலங்கையின் நட்பில் விரிசல் ஏற்பட்டதுடன் இந்தியா சீனாவிற்கு இடையிலான பிராந்திய வல்லரசுக்கான போட்டித்தன்மையானது இவ்விரு நாடுகளிடையே சந்தேக தன்மை கொண்ட பார்வையினை ஏற்படுத்தியது எனலாம்.

3. மேற்குக்கு எதிரான வெளியுறவுக் கொள்கை
யுத்தத்தின் பின்னரான மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையிலான அரசாங்கம் மேற்குக்கு எதிரான வெளியுறவுக் கொள்கையை தெளிவாக வகுத்தது எனலாம். அதாவது யுத்த காலத்தின் போது மேற்குலகத்தவரின் வருகையை எல்லாம் தந்திரோபாயமாக கையாண்டு மேற்குலகின் நிலைமையை நெருக்கடிக்கு தள்ளியது.
2009 காலப்பகுதியில் பிரிட்டன் வெளிவிவகார செயலாளர் டேவிட் மில்லிபொண்ட், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குஷ்னர் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதியை சந்தித்த நிலையில், ஜனாதிபதி “ இலங்கை எந்த நாட்டினதும் காலனித்துவ ஆதசம் அல்ல. இலங்கை எனப்படுவது இறைமையும் ஆட்புல ஒருமைப்பாடும் உடைய சுதந்திர குடியரசு “ என்றார். இத்தன்மையானது மேற்கிற்கு எதிரான செயற்பாட்டினை ஏற்படுத்தியமையை காணலாம்.
மேலும் ஐரோப்பிய யூனியன் ஜீ.எஸ்.ரீ வரிச்சலுகையை நிராகரித்த போதும் அதனை பெரிதுபடுத்தாமல் மாற்று வழி முறையினை பின்பற்றியது மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையிலான அரசாங்கம். இவ்வாறான செயற்பாடானது யுத்தத்தின் பின்னரும் மேற்குக்கு எதிரான வெளிநாட்டுக் கொள்கையினை பின்பற்ற காரணமாய் அமைந்தன எனலாம். இவ்வாறான செயற்பாடுகள் இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைக்கு விடப்பட்ட சவால்களேயாகும்.

4. ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழு
போர்க்களத்தில் எழுந்த மனித உரிமை மீறல் பற்றிய பிரச்சாரத்தினை மேற்கு ஆரம்பிப்பதற்கு முன்பே மனித உரிமை அமைப்பினை இலங்கை அரசு அறிவித்தமையானது முக்கியமான விடயமாக கூறப்பட்டுள்ளது. இவ்வகை தந்திரோபாயத்தினுள்ளேயே ஐ.நா மனித உரிமை

ஆணைக்குழுவினால் இலங்கை அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நிலையில் 2009ம் ஆண்டு மே மாதம் 26ம் திகதி ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கை மீதான குற்றச்சாட்டு 11வது அமர்வாக முன்மொழியப்பட்டது. இதற்கு அமெரிக்கா அதிக ஈடுபாட்டை காட்டி குற்றச்சாட்டை முன்மொழிந்நது எனலாம். மேலும் அமெரிக்காவுடன் மொரிசீயஸ ;, ஆஜென்ரீனா, பொஸ்னியா, கனடா, இத்தாலி தென் கொரியா, இங்கிலாந்து போன்ற 17 நாடுகள் இதனை எதிர்த்தன எனலாம்.

5. பாகிஸ்தானுடனான நல்லுறவு
இலங்கைக்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சுமார் 68 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட இரு தரப்பு உறவு இன்று வரை வலுவடைந்த நிலையிலே காணப்படுகின்றது. யுத்தத்தின் போது இலங்கைக்கு கடுமையான பாதுகாப்பு உதவிகளை வழங்கியதோடு சர்வதேச மட்டத்திலும் இலங்கையின் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்த நாடு பாகிஸ்தான் என்றால் அது மிகையாகாது. இவ்வாறான நிலையில் யுத்தத்தின் பின்னரும் இலங்கை மற்றும் பாகிஸ்தானிற்கு இடையிலான உறவு நிலையானது மேலும் வலுவடைந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டலாம். இலங்கை – பாகிஸ்தானி உறவுக்கு இன்னுமொரு மைல் கல் இரு நாடுகளுக்கும் இடையிலான சுதர்திர வர்த்தக ஒப்பந்தமாகும். (Pakistan Sri Lanka Free Trade Agreement – PSFTA) தெற்காசிய நாடுகளில் இலங்கை பாகிஸ்தானுடன் தான் முதலாவது வர்த்தக ஒப்பந்தத்தை செய்துக் கொண்டது என்பது முக்கியமான அம்சமாக குறிப்பிடலாம்.

**முடிவுரை**

யுத்த்தின் போது காணப்பட்ட அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையானது யுத்தத்தின் பின்னர் பாரிய மாற்றங்களிற்கு உட்பட்டு அதனுடைய இலக்கினை எய்தியுள்ளமையினை காணலாம். யுத்தத்தின் பின்னரான அரசாங்கமானது மேற்கு சாரா நாடுகளுடன் கூடியளவான உறவு பாலத்தினை கட்டியெழுப்பியதுடன் மேற்கு நாடுகளுடனான உறவில் விரிசல் ஏற்பட்டமையினையும் சுட்டிக்காட்டலாம். அதாவது 2009 – 2015 காலப்பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது சீனா, இந்தியா, பாகிஸ்தான், ஈரான் போன்ற மேற்கு சாரா நாடுகளுடன் கூடியளவான உறவு பாலத்தினை கட்டியெழுப்பியதுடன் மேற்கு நாடுகளுடனான உறவில் தளம்பல் நிலையை ஏற்படுத்தியுள்ளமையை காணலாம். இவ்வாறான தன்மையானது இலங்கை அரசியல் , பொருளாதார அபிவிருத்தி நிலையில் பாரிய தாக்கத்தினை செலுத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் யுத்தத்தின் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் புதிய போக்கில் இலங்கையில் சீனாவியுடைய உள் நுழைவானது அமெரிக்கா மற்றும் இந்தியாவிடமிருந்து இலங்கை விலகுவதன் ஆரம்பமாக காணப்பட்டது எனலாம். இவ்வாறான செயற்பாடுகளின் தன்மையானது சர்வதேச ரீதியில் பாரிய அழுத்தங்களை ஏற்படுத்தியதுடன், பல்வேறுபட்ட தாக்கங்களிற்கு முகம் கொடுக்கக் கூடிய நிலையும் இலங்கை அரசிற்கு ஏற்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மையே.

**உசாத்துணைகள்**

1. Appadurai, A. (1981). The Domestic Roots of Indian's Foreign Policy, Dhelhi: Oxford University Press, (p.1).

2. Avtar singh bhasin. (2004) India in Sri Lanka between lion and the ligers , Manas Publications. New Delhi, India

3. Chris Brown . (2005). Understanding international relation (3rd ed.). Palgrave macmillan

4. Jeyapalan, N ., & Joseph, S. International Relations , M.S Publications, Madras 05, (pp. 152 – 198)

5. Palmer . & Perkings. International Relations , A.IT.B.S Publications & distributors, Krishan Nagoor Delhi. India, (pp .717 – 738)

6. கணேசலிங்கம்.கே.ரீ. (2014) . இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை 1948 -2010 ,குமரன் புத்தக இல்லம் , கொழும்பு சென்னை

7. Jeyanaathan, J. (2011). Sri Lanka's post-war Foreign Policy Strategy: Europeans out and Chinese in?. Retrieved from http://www.ipcs.org/article/china/sri-lankas-post-war-foreign-policy-strategy-europeans-out-and-3359.html

8. Kadira Pathiyagoda. (2015). India V. China in Sri Lanka Lessons for rising Powers. Retrieved from http://www.brookings.edu/blogs/order-from-chaos/posts/2015/05/01-china-india-sri-lanka-pethiyagoda